தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2040, மாசி 11

2009 பிப்ரவரி 23, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. ஆவுடையப்பன் அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

> "ஆக்கமுங் கேடும் அதனால் வருதலாற்
> காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு"

ஆக்கமும் அழிவும் சொல்லால் ஏற்படும் என்பதால், எந்தவொரு சொல்லிலும் குறைபாடு நேராமல் கவனமாக இருக்க வேண்டும்.

(மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று பேச முற்பட்டனர்.)

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள். *(குறுக்கீடுகள்)* வினா வரிசை எண் *41*, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடுகள்)*

41—

மின் உற்பத்தி நிலையங்கள்

***92—திரு. நா. இராமகிருஷ்ணன்:**

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

11-429—3

[2009 பிப்ரவரி 23

(அ) தமிழகத்தில் புதிய மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழகத்தில் புதிய புனல் மற்றும் அனல் மின் உற்பத்தி நிலையங்களும், கூடுதல் எரிவாயு சுழலி மின் உற்பத்தி நிலையமும் அமைப்பதற்கான செயலாக்க நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்பட்டு வருகின்றன.

(மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அலையிலிருந்து வெளியேறினர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன். திரு. இராமகிருஷ்ணன், அவையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006-க்குப் பின்பு தமிழக அரசின் சார்பாகப் புதிய அனல் மின் நிலையங்கள் ஏதேனும் அமைக்கப்பட்டுள்ளனவா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 ஆம் ஆண்டிற்குப் பிறகு தமிழ்நாட்டிலே புதிய அனல் மின் நிலையங்கள் தொடங்க வேண்டும் என்று மத்திய, மாநில அரசுகள் கலந்து பேசி வள்ளூரிலே 1,500 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யவும், வட சென்னையிலே 1,200 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யவும், மேட்டூரிலே 600 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யவும் அடிக்கல் நாட்டப்பட்டு, வேலைகள் எல்லாம் தொடங்கப்பட்டு, 2011 மார்ச் மாதத்திற்குள்ளாக இந்த 3 திட்டங்கள்மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்படவிருக்கின்றது. நேற்றைய தினம் உடன்குடியிலே BHEL நிறுவனத்தின்மூலமாக

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2009 பிப்ரவரி 23]

1,600 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யவும், (மேசையைத் தட்டும் ஒலி) தூத்துக்குடியிலே மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் கலந்துகொண்டு துவக்கிவைக்கும் நிலையத்தின்மூலம் 1,000 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யவும், ஜெயங்கொண்டத்திலே 1,500 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யவும், செய்யூரிலே NTPC மூலமாக 4 ஆயிரம் மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யவும், ஆக, 11,400 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்ய திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டங்களிலே 3 திட்டங்கள் 2011 ஆம் ஆண்டிற்குள்ளாக முடிவடையும். மீதி திட்டங்கள் எல்லாம் 2012 ஆம் ஆண்டிற்குள் முடிவடையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் உற்பத்தி நிலையங்கள் தொடங்குவது குறித்து அமைச்சர் அவர்கள் இங்கே விரிவாகச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய தமிழகத்தினுடைய தேவையைப்பற்றியும் இடையிடையே சொல்லப்பட்டிருக்கிறது. மின் தடை ஏற்பட்டதால் பல சங்கடங்களுக்கு ஆளானோம் என்பது எதார்த்தமான உண்மை. இப்போது அந்த உற்பத்திகளுக்கான நிதியொதுக்கீடு குறித்தும், அதனுடைய தேவைகள் குறித்தும், நம்முடைய நிதிநிலை அறிக்கையிலேயும் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் 11,400 மெகா வாட் மின் உற்பத்தி என்பது 2011, 2012-ல் முடிவடையும் என்று சொல்கிறீர்கள். அப்படியானால், இந்த ஆண்டு, இப்போது கோடை தொடங்கிவிட்டது, மீண்டும் மின் தடை வருவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, இடைப்பட்டிருக்கிற இந்த 2, 3 ஆண்டுகளுக்கும் இந்த நிலைமை நீடிக்குமா? அப்படி நீடிக்குமானால், தொழில்கள் மற்ற இதர பணிகள் எல்லாமே தடைபடுமே! அதன் அவசிய தேவையையும், அவசர தேவையையும் கருதி, இந்த அரசு என்ன முயற்சி எடுக்கப் போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம்

[2009 பிப்ரவரி 23

அவர்கள், இந்தக் கோடைக் காலத்திலே மின்சாரம் அனைவருக்கும் வழங்கப்படுமா என்று கேட்டார்கள். வீடுகளுக்கு 22 மணி நேரம் மின்சாரம், எல்லோருக்கும் தமிழகத்திலே வழங்கப்படும். சிறு தொழில்கள், பெரிய தொழிற்சாலைகளுக்கு மட்டும் மின் வெட்டு ஏற்கெனவே அமல்படுத்தப்பட்டது தொடரும். ஆனால் 2009–2010–லே என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே, கூடங்குளத்திலே 2,000 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு 2007 ஆம் ஆண்டு ரஷ்ய அரசாங்கத்திடம் ஒப்பந்தம் செய்யப்பட்டு, அங்கே யுரேனியம் இல்லாத காரணத்தினாலே 2 ஆண்டுக் காலமாக அந்த மின் நிலையம் இயக்கப்படாமல் இருந்தது. இப்போது இந்த ஆண்டு டிசம்பர் மாதம் 1,000 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு அவர்கள் தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, நமக்குக் கூடங்குளம் மின்சாரம், ரஷ்ய அரசாங்கத்திடமிருந்து கிடைக்கக்கூடிய அந்த மின்சாரம் 2009 டிசம்பரிலே கிடைக்கும். அதைப்போல, வள்ளூரில் என்.டி.பி.சி. மூலமாகத் தொடங்கப்பட்ட அந்த மின் திட்டத்தின்மூலம் 2010 அக்டோபரிலே 500 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு அவர்கள் வாக்குறுதி தந்திருக்கிறார்கள். அதைப்போல, வட சென்னையிலே 1,200 மெகா வாட் மின்சார உற்பத்தித் திட்டத்தில் முதல் 600 மெகா வாட் மின்சாரம் அக்டோபர் மாதத்திலேயும், இரண்டாவது 600 மெகா வாட் மின்சாரம், 2011 ஜனவரியிலேயும் உற்பத்தி செய்வதற்கு வாக்குறுதி தந்திருக்கிறார்கள். எனவே 2010–2011–லே தமிழ்நாட்டிலே மின்சாரப் பற்றாக்குறையே இல்லாத அளவுக்குச் சமாளிக்கப்படும். இந்தக் கோடைக் காலத்தைப் பொறுத்தவரையில் நமக்கு இப்போது 1,000 மெகா வாட் மின்சாரம், ஒரு யூனிட் ரூ.8.50 என்று கொடுத்து வெளி மாநிலங்களில் இருந்து வாங்கிக்கொண்டு இருக்கின்றோம். மேலும் இந்தக் கோடைக் காலத்திலே மின்சாரம் தேவைப்படுமானால், 500 மெகா வாட் வரையிலே வட மாநிலங்களில் இருந்து வாங்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டு இருக்கிறது. கோடைக் காலத்திலே மின் தடை இல்லாத அளவுக்கு, வீடுகளுக்கு 22 மணி நேரம் தொடர்ந்து வழங்குவதற்கு, எல்லாவிதமான நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுத்துக்கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2009 பிப்ரவரி 23]

முற்பகல் 9–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வெட்டு இப்போது இருக்கிறது. 2001–ல் இருந்து 2006 வரை எத்தனை யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது; அதற்காக எத்தனை திட்டங்கள் தீட்டப்பட்டன; 2006–லிருந்து இதுவரை எத்தனை திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன; எவ்வளவு யூனிட் மின்சாரம் உறபத்தி செய்யப்பட்டிருக்கிறது என்பதையும், கோடைக் காலத்திலே மின்சாரப் பற்றாக்குறையைச் சமாளிக்க மத்திய அரசை அணுகி மின்சாரம் ஏதேனும் பெறுவதற்கு அரசு ஆவன செய்திருக்கிறதா என்பதையும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001–லே இருந்து 2006 வரையில் எவ்வளவு மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது என்பதை ஏற்கெனவே இந்த அவைக்குத் தெரிவித்திருக்கிறேன். நீர் மின்சாரத் திட்டங்கள்மூலம் 40 மெகா வாட் அளவுக்கு அந்த ஆட்சியிலே உற்பத்தி செய்யப்பட்டது. பெரிய அனல் மின் திட்டங்கள் அந்தக் காலத்திலே உருவாக்கப்படவில்லை. அன்னை சோனியா காந்தி அவர்களையும், திரு மன்மோகன் சிங் அவர்களையும் நாங்கள் மூன்று முறை சந்தித்து, அவர்களிடத்திலே தமிழ்நாட்டின் மின் பற்றாக்குறையை எடுத்துச் சொன்னதற்குப் பிறகு, 1,000 மெகா வாட் மின்சாரத்தை நமக்கு இப்போது கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நேற்றைய தினம் மாண்புமிகு மத்திய அமைச்சர் ஜெயராம் ரமேஷ் அவர்கள் உடன்குடிக்கு வந்திருந்தபோது, மேலும் ஒரு 500 மெகா வாட் கொடுத்தால் கோடைக் காலத்திலே நாங்கள் சமாளித்துவிடுவோம் என்று சொன்னேன். அவர் நிச்சயமாக மின் துறை அமைச்சரைக் கலந்து பேசி 500 மெகா வாட் மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் உண்மையைச் சொல்லவேண்டுமென்று சொன்னால், இப்போது நாம் தீட்டியிருப்பது 1,800 மெகா வாட் மின்சாரத் திட்டம்தான். வட சென்னையிலே 1,200 மெகா வாட்டும், மேட்டூரிலே 600 மெகா வாட்டும்தான்

தமிழ்நாட்டுத் திட்டங்கள். மீதி எல்லாத் திட்டங்களுமே கிட்டத்தட்ட 8,500 மெகா வாட் திட்டங்கள், மத்திய அரசாங்கத்தினுடைய திட்டங்கள். அந்தத் திட்டங்களுக்காக மத்திய அரசாங்கம் மட்டும் கிட்டத்தட்ட ரூ.45,000 கோடி செலவு செய்ய இருக்கிறது. முதன்முதலாக மத்திய அரசாங்கம் மின் திட்டத்திலே இவ்வளவு முதலீடு செய்திருப்பது இந்திய வரலாற்றிலேயே இதுதான் முதல் தடவை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி.வி. சண்முகம்.

திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் யுரேனியம் கையிருப்பில் இல்லாததால் மின் உற்பத்தி திட்டங்கள் தொடங்குவதில் தடை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார். ** இந்தத் திட்டங்களை அறிவித்து இருக்கின்றதா? இப்போது தமிழகத்தில் அறிவித்திருக்கின்ற திட்டங்களுக்கு. .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குற்றஞ்சாட்டிப் பேசக்கூடாது என்று சொல்லியிருக்கிறேன் இல்லையா?

திரு. சி.வி. சண்முகம்: நீக்கிவிடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது.

திரு. சி.வி. சண்முகம்: போதிய யுரேனியம் கையிருப்பில் இல்லாமல் தமிழகத்தில் ஆரம்பிக்கப்படுவதாக அறிவித்த திட்டங்கள் நிறைவேற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே சுட்டிக்காட்டியதைப்போல, கூடங்குளத்தில் 2,000 மெகா வாட் மின்சாரம், ரஷ்ய அரசாங்கத்தினுடைய உதவியால் நிறுவப்பட்டது. அதற்கு 2007 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியிலே ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதற்குப் பிறகு அ.தி.மு.க.வும் ஆட்சியிலே இருந்தது. அந்த ஆட்சியிலேயும் விரைவிலே அந்தத் திட்டத்தை அமல்படுத்த

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

2009 பிப்ரவரி 23]

வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். ஆனால், ரஷ்ய அரசாங்கத்திடம் தேவையான யுரேனியம் இல்லாத காரணத்தினாலே, அவர்கள் உற்பத்தி செய்யவில்லை. இப்போது நாங்கள் மறுபடியும் எப்படியாவது அந்தத் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று வற்புறுத்திய காரணத்தினால், அவர்கள் யுரேனியத்தை ஆஸ்திரேலியாவிலிருந்து வாங்கி தமிழகத்திற்கு இந்தத் திட்டத்தை அமல்படுத்துகிறோம் என்று தெரிவித்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை 2009 டிசம்பரிலே தொடங்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, யாரையும் ஏமாற்றுவதற்கு இந்த அரசாங்கம் திட்டம் தீட்டவில்லை. அது அ.தி.மு.க.-வாக இருந்தாலும், தி.மு.க.-வாக இருந்தாலும், மின் திட்டத்தைப் பொறுத்தவரையிலே தமிழ்நாட்டுக்குத் தேவையான அளவுக்கு உற்பத்தி செய்ய வேண்டும் என்பதிலே கவனம் செலுத்திக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குத்தாலம் தொகுதியில் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களால் 1996–2001 ஆட்சிக் காலத்தில் 101 மெகா வாட் குத்தாலம் எரிவாயு மின் சுழலி நிலையம் தொடங்கப்பட்டது. தற்போது அந்த எரிவாயு மின் சுழலி நிலையம் 4.5 இலட்சம் S.C.M.D. — Standard Cubic Metre per day— என்று சொல்லக்கூடிய எரிவாயுமூலம் இயங்குகிறது. இப்பகுதியில் எரிவாயு அதிகமாகக் கிடைக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசிடமிருந்து கூடுதலாக எரிவாயு கிடைக்கப்பெற்று, 101 மெகா வாட் குத்தாலம் எரிவாயு மின் சுழலி நிலையத்தின் உற்பத்தித் திறனை நம்முடைய மின்சாரத் தேவைக்கு ஏற்றவாறு அதிகரிக்கச் செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். 1996–2001 ஆட்சிக் காலத்திலேதான் குத்தாலம் தொகுதியில் கடலங்குடியில் 230 கிலோ வாட் துணை மின் நிலையமும், குடவாசல் பகுதியில் 110 கிலோ வாட் துணை மின் நிலையமும், தற்போது மேக்கிரிமங்கலத்திலே துணை மின் நிலையமும் அமைக்கப்பட்டு கலைஞருடைய ஆட்சி எப்பொழுதெல்லாம் வருகிறதோ, அப்பொழுதுதான் மின்சாரம் சம்பந்தப்பட்ட அனைத்துக் கோரிக்கைகளும் நிறைவேற்றப்படுகின்றன. அதேபோல் குத்தாலம் 101 மெகா வாட் எரிவாயு மின் சுழலி நிலையத்தின் உற்பத்தித் திறனை அதிகரிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

[2009 பிப்ரவரி 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன் அவர்கள் கடந்த வாரம் என்னிடத்திலே குத்தாலம் பகுதியில் கூடுதலாக எரிவாயு கிடைக்கிறது என்றும், மேலும் 101 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள். அவர் சொன்ன அன்றே மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சரிடத்திலே கலந்து பேசி, அங்கே எரிவாயு அதிகமாக இருக்குமானால், கூடுதலாக 101 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அவர்கள் பரிசீலிப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நம்முடைய தமிழ்நாட்டில் பல மணி நேரம் மின் வெட்டு இருந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், தமிழக அரசும் எடுத்த நடவடிக்கையின் காரணமாக தற்போது அது சரி செய்யப்பட்டது. ஆனால், தற்போது சில நாட்களாக மீண்டும் 4 மணி நேரம்,—கடலூரைப் பொறுத்த அளவில் மாலை 4 மணியிலிருந்து 6 மணி வரையிலும், இரவு 10 மணிக்கு மேலேயும்—பல மாவட்டங்களில் மின் நிறுத்தம் ஏற்படுகிறது. ஆக, தமிழகத்தில் மீண்டும் மின் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறதா; 24 மணி நேரமும் மின்சாரம் சீராகக் கிடைப்பதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் சுட்டிக்காட்டியதைப்போல, ஏதாவது கல்லூரியிலே மின் தடை ஏற்பட்டிருக்குமானால் அதை உடனடியாக இன்றே சரி செய்வதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்கும். பள்ளிகள், கல்லூரிகளிலே எந்தக் காரணத்தைக் கொண்டும், மின் தடை செய்யக் கூடாது என்று

2009 பிப்ரவரி 23]

ஏற்கெனவே அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. எனவே, கல்லூரிகளைப் பொறுத்தவரையிலே, மாணவர்கள் படிப்பதற்குத் தேவையான மின்சாரம் வழங்க வேண்டுமென்று, இந்த அரசாங்கம் அறிவுரை வழங்கியிருக்கின்ற காரணத்தினாலே குறைபாடுகள் இருக்குமானால், அதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், இன்றே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் புதிய மின் உற்பத்தி நிலையங்கள் துவக்கப்படக்கூடிய சூழ்நிலையில், ஏற்கெனவே மின் வாரியத்தில் 30,000 ஒப்பந்த, பகுதி நேர தொழிலாளிகள் பணி செய்து கொண்டிருக்கிறார்கள்; அவர்களுடைய பணியை எதிர்காலத்தில் நிரந்தரப்படுத்துவதற்கு அரசு முன்வருமா; அது பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் ஏற்கெனவே 2000 ஆம் ஆண்டிலே நம்முடைய கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, 10,500 ஒப்பந்தத் தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்பட்டார்கள். அதற்குப் பிறகு மறுபடியும் 2006 ஆம் ஆண்டு, விநியோகப் பிரிவிலே இருக்கக்கூடிய 20,600 பேரையும் நிரந்தரம் செய்ய வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிகளைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள், பட்டாளி மக்கள் கட்சியினுடைய தொழிற்சங்கங்கள் என அத்தனை சங்கங்களும் ஒன்று சேர்ந்து, முதலமைச்சரிடத்திலேயும், என்னிடத்திலேயும் விண்ணப்பம் கொடுத்தன. அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, 21,600 பேரும் நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்று ஏற்கெனவே நான் இந்த அவையிலே அறிவித்திருக்கிறேன். இதுவரையில் 18,000 பேர் நிரந்தரம் செய்யப்பட்டிருக்கிறார்கள். மீதியிருக்கக்கூடிய 3,600 பேரும் அடுத்த ஆண்டு, 2010–லே நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.